www.tamilarangam.net

# இளைஞர்களைக் கடந்துசென்ற தலைவர்!




'தி ஐலண்ட்' பத்திரிகை அன்று வெளியிட்ட கருத்தோவியம்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# அரசியல் தொடர்

## அற்புதன் எழுதுவது

# 12 கண்ணீர் விட்டுக் கதறிய இளைஞர்கள்

### முதல் பெரிய கொள்ளை

5.12.78இல் நடைபெற்ற திருநெல்வேலி மக்கள் வங்கிக் கொள்ளையில் பிரபாகரனும் நேரடியாகப் பங்கு கொண்டார்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வங்கிக் கொள்ளைகளையடுத்து பாதுகாப்பை அரசு பலப்படுத்தியிருந்தது.

திருநெல்வேலி மக்கள் வங்கியில் மூன்று பொலிசார் பாதுகாப்புக்காக இருந்தனர். ஒருவர் இயந்திரத் துப்பாக்கியும் வைத்திருந்தார்.

அந்த இயந்திரத் துப்பாக்கியை பறித்தெடுத்து பொலிசாரை நோக்கி சுட்டனர் புலிகள்.

ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் கழிவறைக்குள் ஓடிச்சென்று கதவை மூடிக் கொண்டார். கதவை உடைத்து அந்த கான்ஸ்டபிளையும் சுட்டுக்கொன்றார்கள்.

கிங்ஸ்லி பெரேரா, சத்தியநாதன் என்னும் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கொல்லப்பட்டனர். செல்வம் என்னும் பொலிஸ் கான்ஸ்டபிள் படுகாயமடைந்தார்.

12 இலட்சம் ரூபா பணத்துடன் அங்கிருந்த கார் ஒன்றை பறித்தெடுத்துக் கொண்டு புலிகள் தப்பிச் சென்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் நடைபெற்ற மிகப்பெரிய வங்கிக் கொள்ளை அதுதான்.

78ம் ஆண்டு 12 இலட்சம் ரூபா என்பது மிகப்பெரிய தொகைதான்.

### வெளவால் கதை

இக்கால கட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையின் கீழ் இயங்கிய தமிழ் இளைஞர் பேரவைக்குள் பிளவுகள் ஏற்படத் தொடங்கின.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையின் தீவிரம் போதாது என்று இளைஞர் பேரவையில் ஒரு சாரார் வெளிப்படையாகவே பேசத் தொடங்கினார்கள்.

1978ம் ஆண்டு கியூபாவில் நடைபெற்ற இளைஞர் மாணவர் மாநாட்டுக்கு கூட்டணி சார்பில் அனுப்பப்பட்டவர்களில் மூவர் புலிகளைச் சேர்ந்தவர்கள். காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் பேரவையைச் சேர்ந்தவர்கள்.

கியூபாவுக்கு தன்னை அனுப்பி வைக்கவில்லை என்று வண்ணை ஆனந்தனுக்கு கோபம்.

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பிரசார பீரங்கியாக இருந்தவர் வண்ணை ஆனந்தன்.

உண்மையாகவே சிறந்த பேச்சாளர். வண்ணை ஆனந்தன் பேசும் கூட்டங்கள் என்றா[illegible] மக்கள் திரளுவார்கள்.

கூட்டத்தின் முன்னால் அமர்ந்திருக்கும் சிறுவர்களைப் பார்த்து வண்ணை ஆனந்தன் கேள்வி ஒன்று கேட்பார்,

**"மரம் பழுத்தால்
என்ன வரும்?"**

உடனே சிறுவர்கள் பதில் சொல்லுவார்கள்.

**"வெளவால் வரும்!"**

சிறுவர்கள் பதில் சொன்னவுடன் வண்ணை ஆனந்தன் சொல்லுவார்,

**"வரும் வெளவால் காலில்
பீரங்கியுடன்தான் வரும்"**

கூட்டத்தில் கரகோசம் வானைப் பிளக்கும்.

தமிழீழக் கோரிக்கைக்கு மக்கள் ஆதரவு உண்டென்று தெரிந்தால் வெளிநாட்டு உதவி கிடைக்கும். ஆயுத உதவியாகவும் அது கிடைக்கும் என்பதுதான் 'வெளவால்' கதையின் அர்த்தம்.

### குமார்மீது தாக்குதல்

ஒரு சுவாரசியமான தகவலை இந்த நேரத்தில் சொல்லவேண்டும்.

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் ஒரு ஆசனம் கேட்டவர் குமார் பொன்னம்பலம்.

கூட்டணி ஆசனம் கொடுக்கவில்லை. குமாருக்கு ஆவேசம் வந்துவிட்டது.

யாழ் தொகுதியில் சுயேட்சையாகப் போட்டியிட்டார்.

யாழ்ப்பாணத்தில் கூட்டணி சார்பாக போட்டியிட்டவர் யோகேஸ்வரன்.

தமிழீழக் கோரிக்கையை கிண்டல் செய்தும், கூட்டணித் தலைவர்களை கேலி செய்தும் பிரசாரம் நடத்தினார் குமார் பொன்னம்பலம்.

குமாரை மேடைகளில் சிழிக்கத் தொடங்கினார் வண்ணை ஆனந்தன்.

குமாரின் சின்னம் மரம். அது வண்ணை ஆனந்தனுக்கு வசதியாகிவிட்டது.

"குமார் நீ மரமாக வந்து குறுக்கே நிற்கிறாய். எட்டப்ப வேலை செய்கிறாய்?" என்று ஒருமையில் அழைத்து வசை பாடுவார்.

குமார் பொன்னம்பலத்தின் மாமனார் முருகேசம்பிள்ளை. யாழ் அரசாங்க அதிபராக இருந்தவர்.

பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் வந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணி ஹர்த்தால் நடத்தியது.

அந்த நேரத்தில் நல்லூர் கோவிலுக்கு சென்றார் பிரதமர் சிறிமாவோ.

அவரது காலுக்கு தண்ணீர் ஊற்றி வரவேற்றவர் முருகேசம்பிள்ளை.

அந்தச் சம்பவத்தையும் மேடைகளில் குறிப்பிடுவார் வண்ணை ஆனந்தன்.

"தந்தை செல்வாவின் மைந்தன் சந்திரகாசன் ஆசனம் கேட்கவில்லை. எங்களுக்கு ஆதரவாக பிரசாரம் செய்கிறார்.

ஆனால் குமார் எங்களிடம் ஆசனம் கேட்டுவிட்டு அதனைக் கொடுக்கவில்லை என்பதற்காக எதிர்த்து போட்டியிடுகிறார்.

என்ன காரணம்?

தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசன் இரும்பு மனிதன் நாகநாதனின் மருமகன்.

குமார் பொன்னம்பலம் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் காலுக்கு தண்ணீர் ஊற்றிய முருகேசம்பிள்ளையின் மருமகன். அதுதான் துரோகமான வேலை செய்ய ஏவப்பட்டிருக்கிறார்"

என்று சொல்வார் வண்ணை ஆனந்தன்.

இவ்வாறு பிரசார பீரங்கியாக இருந்த வண்ணை ஆனந்தனை கியூபாவுக்கு அனுப்பவில்லை கூட்டணி.

### எங்கே தேசிய மன்றம்

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மக்களிடம் சொன்னார்கள்.

**"தேர்தலில் வெற்றி பெற்றவுடன் தமிழீழ தேசிய மன்றத்தை உருவாக்குவோம். தமிழீழ அரசியல் சட்டத்தை வகுப்போம்."**

சொன்னார்களே தவிர வெற்றி பெற்றவுடன் அதனை மறந்துவிட்டார்கள்.

தமிழ் இளைஞர் பேரவையில் இருந்த தீவிரப் போக்குடைய இளைஞர்கள் "தமிழீழ தேசிய மன்றத்தை கூட்டு" என்று குரல் கொடுக்கத் தொடங்கினார்கள்.

அவர்களோடு வண்ணை ஆனந்தனும் சேர்ந்து குரல் கொடுத்தார்.

கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒழுக்கக் கோர்வை தயாரிக்கவேண்டும் என்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசினார் வண்ணை ஆனந்தன்.

### திறப்பு விழா

யாழ்ப்பாணத்தில் காப்புறுதிக் கூட்டுத்தாபன திறப்பு விழா ஒன்று நடைபெற்றது.

திறப்பு விழாவில் யாழ் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன், மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ள விருந்தனர்.

விசயமறிந்த இளைஞர்கள் நூறுபேர் வரை யாழ் பா.உ யோகேஸ்வரன் வீட்டின் முன்பாக குழுமிவிட்டனர்.

"சிங்கள அரசின் கூட்டுத்தாபனத்தை திறந்துவைக்கும் விழாவுக்கு செல்ல வேண்டாம்."

என்றார்கள் இளைஞர்கள்.

யோகேஸ்வரன் இளைஞர்களிடம் சொன்னார்,

"இது அமுதரின் கட்டளை. நான் மீற முடியாது. போயே ஆகவேண்டும்."

அப்போது அங்கே வந்தார் வண்ணை ஆனந்தன். அவரை கொண்டு சென்று யோகேஸ்வரன் முன்பாக நிறுத்திவிட்டு,

"எடுத்துச் சொல்லுங்கள் வண்ணை அண்ணா!"

என்றனர் இளைஞர்கள்.

வண்ணை ஆனந்தன் கண்ணீர் விட்டார்.

"இவர்களை மீறிப் போகவேண்டாம்" என்று சொன்னார்.

யோகேஸ்வரன் தனது முடிவில் உறுதியாக இருந்தார். இளைஞர்கள் யோகேஸ்வரன் வீட்டின் வாயில் முன்பாக அமர்ந்துவிட்டனர்.

"எங்களை தாண்டி போக நினைத்தால் போகலாம்" என்றனர்.

உதயசூரியன் சின்னம் பொறித்த சால்வையோடு இளைஞர்களை கடந்து காப்புறுதிக் கூட்டுத்தாபன விழாவுக்கு போனார் யோகேஸ்வரன்.

அவர் கடந்து சென்றபோது இளைஞர்கள் சிலர் கண்ணீர்விட்டபடி சொன்னார்கள்:

"போகிறீர்களே அண்ணா!"

காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முன்பாக வந்திறங்கினார் மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம்.

கூட்டணியின் தீவிர தொண்டராக இருந்த அப்பையா என்ற இளைஞன் ஓடிச்சென்று அவரது கையில் பிடித்தான்.

"போகவேண்டாம் அண்ணா!"

கையை உதறி விடுவித்துக்கொண்டு விழாவுக்கு சென்றார் தர்மலிங்கம்.

யாழ் நகர மேயர் துரையப்பா போன்றவர்கள் திறப்பு விழாக்கள் நடத்தியபோது துரோகிகள் என்ற தலைவர்கள்,

தாமே நேரடியாக அரச திறப்பு விழாக்களில் கலந்துகொள்ள ஆரம்பித்தார்கள்.

இளைஞர்களின் நம்பிக்கையீனம் மெல்ல மெல்ல வளர்ந்தது.

### ஆவரங்கால் மாநாடு

1978ம் ஆண்டு யாழ்ப்பாணம் கோப்பாய் தொகுதியில் உள்ள ஆவரங்காலில் கூட்டணி மாநாடு நடத்தியது.

இளைஞர் மாநாட்டுக்கு கோப்பாயைச் சேர்ந்த பரமேஸ்வரன் தலைமை தாங்கினார்.

இவர் கைதடி வங்கிக்கொள்ளையில் சம்பந்தப்பட்டவர். இளைஞர் பேரவை ஆயுதம் ஏந்தவேண்டும் என்ற கொள்கையுடையவர்.

"தலைவர்கள் தீவிரமாக செயற்பட வேண்டும். வேகம் போதாது. கல்லும், முள்ளும் காடுமே வாழ்க்கையாகிவிட்ட எங்கள் இளைஞர்களை நினைத்துப் பாருங்கள். போராட திட்டம் வகுத்துத் தாருங்கள்"

என்று பேசினார் பரமேஸ்வரன்.

இறுதியாக மாநாட்டு நிறைவாக பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அச்சுவேலி சந்தியில் இருந்து ஆவரங்காலை நோக்கி ஒரு ஊர்வலம் வந்தது.

"தமிழீழ தேசிய மன்றத்தை கூட்டுக" என்று அந்த ஊர்வலத்தில் வந்த இளைஞர்கள் கோஷம் எழுப்பிக்கொண்டு வந்தார்கள்.

மாநாட்டுக்குள் ஊர்வலம் வந்தவுடன் கூடியிருந்த மக்கள் ஏதோ பிரச்சனை என்று பயந்து எழுந்து ஓடத் தொடங்கி விட்டனர்.

மேடையில் 'வாழ்க ஈழ தமிழகம்' என்னும் பாடலை பாடிக்கொண்டிருந்தார்கள்.

### தேசிய கீதம்

அதுதான் தமிழீழ தேசிய கீதம் என்று கூட்டணியினரால் கூறப்பட்ட பாடலாகும்.

கூட்டங்கள் ஆரம்பிக்கும்போது தேசியகீதம் இசைக்கப்படுவது கூட்டணியின் அன்றைய நடைமுறை.

**"வாழ்க ஈழத் தமிழகம்
வாழ்க இனிது வாழ்கவே.."**

தமிழீழ தேசிய கீதம் என்று சொல்லப்பட்ட இந்த பாடலை இயற்றியவர் புலவர் பரமஹம்சதாசன். இவர் ஒரு இந்திய குடிமகன். அந்தப் பாடலையும் காசி ஆனந்தனே எழுதியதாக தவறாக நினைக்கப்பட்டதுமுண்டு.

மாநாட்டு மேடையில் பாடல் தடைப்பட்டது. மேடையில் அமிர்தலிங்கம்-சிவசிதம்பரம் போன்ற தலைவர்களும் நின்றுகொண்டிருந்தனர்.

சிவசிதம்பரம் சற்று அதிர்ந்து போனார். அமுதர் முகம் சிவந்தது.

ஊர்வலத்தில் வந்தவர்களை ஒருமுறை உற்றுக் கவனித்துவிட்டு அமுதர் சொன்னார்.

"இது ஈழ விடுதலை இயக்கக்காரரின் வேலை. தொடர்ந்து பாடுங்கள்"

சிவசிதம்பரம் பாடல் முடிந்தவுடன் கூடியிருந்த மக்களைப் பார்த்து சொன்னார்:

"தமிழீழ தேசிய கீதத்திற்கே மதிப்பு கொடுக்க முடியாதவர்கள் தமிழீழத்திற்காகப் போராடப் போகிறார்களா?"

ஊர்வலத்திற்கு தலைமை தாங்கிய முத்துக்குமாரசாமி உடனே ஒரு சிறு தாளில் ஒரு குறிப்பு எழுதி சிவாவிடம் அனுப்பினார்.

"தேசிய கீதம் பாடுவதை குழப்ப நாம் நினைக்கவில்லை. ஊர்வலம் வந்தபோது பாடலும் இசைக்கப்பட்டுக்கொண்டிருந்தது. தற்செயல் சம்பவம்."

சிவா குறிப்பை படித்துவிட்டு அலட்சியமாக இருந்துவிட்டார்.

கூட்டத்திற்குள் ஊர்வலத்தினர் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார்கள்.

அமுதருக்கு கோபம் வந்துவிட்டது.

"தொண்டர்களே என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? பிரசுரம் விநியோகிப்பதை தடுத்து நிறுத்துங்கள்!"

என்று ஒலிபெருக்கியில் கட்டளையிட்டார்.

**(தொடர்ந்து வரும்)**

### (எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி)

முடியாது என்பது தெரிந்த விடயம்.

ஆனால், சர்வதேச அபிப்பிராயம் மற்றும் அந்த தீர்வுத் திட்டத்தை ஆராயவேண்டிய அவசியம் ஏற்பட்டால் தமது இயக்கத்திற்குள் ஏற்படக்கூடிய தளர்வு கள் போன்ற சிக்கல்கள் எதற்கு என்றே பிரபா நினைக்கிறார்.

எனவேதான் உடனடிப் பிரச்சனை என்ற தளத்தில் வைத்தே இரண்டில் ஒன்றை தீர்மானித்துவிடவே புலிகள் விரும்புகிறார்கள்.

புலிகளது இந்த வியூகத்தை ஊடறுத்து செல்ல நினைக்கும் அரசு பொருளாதார தடை தளர்வு, மற்றும் மூவாயிரம்கோடி ரூபாய்களில் அபிவிருத்தி போன்ற திட்டங்களை முன்வைத்துப் பார்த்தது.

ஆனால், புலிகள் அதனை அவதானித்துவிட்டு தமது பொறியைப் பூநகரியில் வைத்திருக்கிறார்கள்.

புலிகளது இராணுவ நிலைகள் எதனையும் அகற்றுமாறு அரசு கோரவில்லை.

தீர்வுக்கு முன் அவ்வாறு கோருவதும் நியாயமில்லை.

ஆனால், புலிகள் பூநகரியில் இராணுவ முகாமை அகற்றுமாறு கோருகிறார்கள்.

இராணுவத்தை அகற்றுவது அரசுக்கு ஒன்றும் முடியாத காரியமல்ல.

ஆனால், புலிகளோடு மீண்டும் போர் தொடங்கினால் எந்த முகத்தோடு இராணுவத்தை எதிர்கொள்வது என்பதுதான் அரசின் யோசனையாக இருக்கிறது.

'போ என்றால் போ வா என்றால் வா' என்று கட்டளைக்கு மட்டும் கட்டுப்பட இராணுவத்தினர் வெறும் இயந்திரங்களல்ல.

அவ்வாறு செய்தார் என்றுதானே பிரேமா மீது அன்று கடும் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது.

எனவே கிளாலி போக்குவரத்தை கண்டும் காணாமல் இருந்துகொண்டு அரசியல் பேச்சை ஆரம்பிக்கலாம்; போக்குவரத்து பாதை பிரச்சனையை சற்று ஆறப்போடலாம் என்று அரசு நினைக்கிறது.

ஆனால், அரசு மீது நம்பிக்கையீனம் தெரிவிக்க சிறப்பு துருப்புச் சீட்டாக உள்ள பூநகரி பாதை விவகாரத்தை ஆறப்போட புலிகள் விடுவார்களா? விடமாட்டார்கள் என்றே தெரிகிறது.

இரு தரப்புமே தமது இராணுவ பலத்தை இழக்காமல் பேச்சைத் தொடருவதே சாத்தியமான ஒன்று.

நம்பிக்கையான அறிகுறிகள் காணப்படும் வரை சந்தேகம் நிலவும் என்பதால் இரு தரப்புமே தமது துப்பாக்கிகளை அலட்சியம் செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது.

பூநகரி பாதை விவகாரத்தில் புலிகளது கோரிக்கை இராணுவ விவகாரத்தோடு தொடர்புடையது என்பதால்தான் அரசு கையைப் பிசைய வேண்டியிருக்கிறது.

முன்பு ஒருமுறை புலிகள் பிரேமா அரசிடம் கூறினார்கள்,

'பூநகரிப் பாதையை திறக்க முடியாவிட்டால் கிளாலி கடல் ஏரித் தடையை நீக்கவேண்டும்' என்று.

இப்போது சந்திரிக்கா அரசு பதவிக்கு வந்த பின்னர் கிளாலி பாதை போக்குவரத்து நடக்கிறது.

மோதல் தவிர்ப்புக்கு பின்னர் பகலிலும் போக்குவரத்து நடக்கிறது. அந்தப் பாதை தடைசெய்யப்பட்டிருந்த நேரத்திலும்கூட அதன் வழியாக வந்த மக்களை தாண்டிக்குளம் தாண்டி வவுனியா வர படையினர் அனுமதித்தனர். செல்லவும் அனுமதித்தனர். இப்படி அனுமதித்துக்கொண்டே கடலில் வைத்து வேட்டையும் நடத்தினார்கள்.

ஆனால், புலிகள் ஆனையிறவு மூலம் பயணிகள் யாழ் சென்றால் உள்ளே விடமாட்டார்கள். இப்போது போர் தவிர்ப்பு நேரத்தில் புலிகளது வாகனங்கள் படையினரது கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு வந்து செல்லுகின்றன.

ஆனால், போர் தவிர்ப்பு என்று ஆனையிறவு ஊடாக பயணிகள் சென்றால் புலிகள் தமது கட்டுப்பாட்டு பகுதிக்குள் அனுமதிப்பார்களா? மாட்டார்கள்.

எனவே- போக்குவரத்து பாதை விவகாரத்தில் புலிகளது நிலைப்பாடுதான் அரசைவிட இறுக்கமாக இருக்கிறது.

இதற்கான காரணங்கள்: புலிகள் தமது சுதந்திர நடமாட்டம் உள்ள பாதையை விரும்புவது,

கிளாலி பாதை மூலம் தமது போராட்டத்திற்கு கிடைக்கும் நிதி வருவாயை இழக்க விரும்பாமை,

மூன்றாவது காரணம்- அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாத கோரிக்கை மூலம் அதன் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குவது.

பூநகரி பாதையை திறக்க முடியாவிட்டாலும் கிளாலி பாதையை அரசு தடை செய்யப்போவதில்லை.

கிளாலி பாதை பயணம் மக்களுக்கு சிரமமானது. அதுபோல மழைக்காலங்களில் பூநகரிப்பாதை போக்குவரத்தும் சேறு சகதி நிரம்பியதுதான்.

எனவே- பொது மக்களுக்கு உள்ள சிரமத்தை தவிர்க்கவே பூநகரிப் பாதை என்று கூறமுடியாது. மேலும் ஏற்கனவே புலிகள் கிளாலி கடல் ஏரித் தடையை விலக்கி போக்குவரத்து நடத்துவது பற்றி கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

எனவே புலிகள் அரசியல் பேச்சை நடத்த விரும்பினால் விட்டுப்பிடிக்கும் முறையை பாதை திறப்பு விவகாரத்தில் கையாள முடியும்.

ஆனால் விட்டுப் பிடிப்பதைவிட கிடைத்த பிடியை விடாமல் இருப்பதே புலிகளது எண்ணம்.

ஆக, பூநகரி பாதை திறப்பு கோரிக்கை அரசுக்கு புலிகள் வைத்துள்ள பொறி- என்பது சந்தேகத்துக்கிடமற்றது.

அரசு-புலிகள் என்ற இருதரப்பும் ஒரு தரப்பின் இராணுவ பலத்தை மறுதரப்பு பலவீனப்படுத்தும் வகையில் கோரிக்கைகளை முன்வைக்காமல் நடந்துகொண்டால்தான் பேச்சைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியும்.

சந்தேகங்கள் இருக்கலாம். ஆனால் அந்த சந்தேகம் விட்டுக்கொடுப்புக்களுக்கு முட்டுக்கட்டையாகிவிடக்கூடாது. ஆனால் துரதிஷ்டவசமாக நிலமை அப்படித்தான் இருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்